-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த கொழும்பு கொமர்ஷியல் பசளைக் கம்பனியின் 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வரையறுத்த கொழும்பு கொமர்ஷியல் பசளைக் கம்பனியின் 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிரயாயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கத்தை செலுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்த்தொழில் ஐயப்பாட்டினையும் பேனுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளின் ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தவதன் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. போதியளவு நிச்சியமற்ற நிலைமைகள் உள்ளதாக நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதுக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்களை முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கப்பூர்வமாக செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய போதுமான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கப்பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தவா என்பதும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இனக்கமின்மைகள்

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் வட்டி செலவினம் காசுப் பாய்ச்சல் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் வருடாந்த குத்தகை வட்டி செலவினமான ரூபா 1,683,333 ஆன பெறுமதி மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றினுள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் தயாரிக்கும் போது நேர்ந்துள்ள இந்த குறைப்பாடு எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்க விரும்புகின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் குறித்த வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021/2022 நிதி ஆண்டிற்குரிய ரூபா 1,899,144 ஆன விடுவிக்கப்பட்ட தொகை (Dispatched Money) மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களினுள் ஏனைய வருமானங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் மீளாய்வாண்டின் இலாபம் அப் பெறுமதியினால் மிகையாக மதிப்பிடப்பட்டிருந்தது. | கணக்கிடும் போது நேர்ந்துள்ள இந்த குறைப்பாடு சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படுமென தெரிவிக்க விரும்புகின்றேன். | கம்பனியின் இலாபம் சரியாக மதிப்பிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நடைமுறை பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 3,630,022 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட வைப்பு பெறுமதியில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தினை கடந்த கோரப்படாத நிறுத்தி வைக்கப்பட்ட வைப்பு பெறுமதி ரூபா 3,530,022 ஆக காணப்பட்டதுடன் அப் பெறுமதி பகுப்பாய்வு செய்யப்பட்டு கம்பனியின் வருமானமாக இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரும் ஆண்டில் குறித்த சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்க விரும்புகின்றேன். | காலங்கடந்த வைப்புக்களுக்கு உரித்தில்லாத போது வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியினால் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பசளை இருப்பு பெறுமதி குறித்த பசளை துறைமுகத்திற்கு பெறப்பட்ட திகதியை (Arrival Date) அடிப்படையாகக் கொண்டு இணங்கானப்படுவதுடன் அவ்வாறு இனங்காணப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பசளை இருப்பின் கொள்வனவு விலை மற்றும் இருப்பின் கிரயம் முறையே ரூபா 7,547,932,485 மற்றும் ரூபா 8,287,975,191 என கணக்கிடப்பட்டிருந்தது. மேற்படி பெறுமதி பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| (i) | இறக்குமதி செய்யப்பட்ட பசளை இருப்பின் கொள்வனவு விலையாக ரூபா 7,547,932,485 ஆன பெறுமதி கணக்கிடும் போது ஆண்டினுள் கொடுப்பனவு செய்துள்ள இருப்புக்களுக்குரிய பெறுமதி கொடுப்பனவு செய்யப்பட்ட திகதியினை அடிப்படையாகக் கொண்டு மற்றும் மேலும் இன்னுமாக செலுத்துவதற்குள்ள இருப்புக்களுக்குரிய பெறுமதி அவ் இருப்புக்கள் துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்ட திகதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டு உட்சேர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட பசளை இருப்பின் கொள்வனவு பெறுமதி ரூபா 50,969,114 ஆன தொகை அதிகமாக கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்கிடும் போது நேர்ந்துள்ள இந்த குறைப்பாடு சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படுமென தெரிவிக்க விரும்புகின்றேன். | இருப்பானது சரியான பெறுமதியுடன் கணக்கிடப்படல் வேண்டும். |
| (ii) | தேசிய கொள்வனவாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11,955,750 ஆன பெறுமதியிலான கரிம பசளை இருப்பு, இறக்குமதி செய்யப்பட்ட இருப்பாக கணக்கிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இந்த நிலையை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்ற விரும்புகின்றேன். | பசளை இருப்பு சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன்னரான இலாபம் கணக்கிடும் போது குத்தகைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட மோட்டார் வாகனத்திற்குரிய ரூபா 4,085,984 ஆன வருடாந்த தேய்மானம் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் தயாரிக்கும் போது நேர்ந்துள்ள இந்த குறைப்பாடு சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படுமென தெரிவிக்க விரும்புகின்றேன். | நிலையான சொத்துக்கள் தொடர்பாக வருடாந்த தேய்வு கணக்கிடப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படல் வேண்டும். |
| (இ) | காசுப் பாய்ச்சல் கூற்றினுள் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் நிதிக் குத்தகை முறைக்கு கையகப்படுத்தப்பட்ட இரு மோட்டார் வாகனங்களுக்குரிய ரூபா 3,686,895 ஆன காசு உட்பாய்ச்சல் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறான காசு உட்பாய்ச்சல் உள்ளவாராக மீளாய்வாண்டினுள் ஏற்பட்டிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கணக்குகள் தயாரிக்கும் போது நேர்ந்துள்ள இந்த குறைப்பாடு சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படுமென தெரிவிக்க விரும்புகின்றேன். | காசுப் பாய்ச்சல் கூற்றினுள் சரியாக குறித்த சீராக்கல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | காசுப் பாய்ச்சல் கூற்றினுள் நிதி நடவடிக்கைகளின் கீழ் குத்தகை தவணைக் கட்டணம் செலுத்தலாக ரூபா 2,228,063 என காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் உள்ளவாரான தவணைக் கட்டண செலுத்தலின் பெறுமதி ரூபா 2,627,151 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 399,088 ஆன பெறுமானத்தில் காசு வெளிப்பாய்ச்சல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் தயாரிக்கும் போது நேர்ந்துள்ள இந்த குறைப்பாடு சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படுமென தெரிவிக்க விரும்புகின்றேன். | காசுப் பாய்ச்சல் கூற்றினுள் சரியாக குறித்த சீராக்கல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | கம்பனியினால் கணக்கு நடவடிக்கைகளுக்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 3,894,518 ஆன மென்பொருள் அமைப்பின் (Sever & Network) நடவடிக்கைகள் 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் கிரயம் இன்னுமாக நடைமுறையிலுள்ள வேலை மூலதனமாக கணக்கிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் அதற்குரிய மீளாய்வாண்டின் தேய்மான பெறுமதியான ரூபா 1,298,171 மற்றும் கடந்த ஆண்டுகளுக்குரிய தேய்மான பெறுமதியான ரூபா 1,839,076 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. இந்த காரணத்தினால் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் பெறுமதி, மீளாய்வாண்டின் இலாபம் மற்றும் திரண்ட இலாபம் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த சிக்கலினை எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்க விரும்புகின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இனை பின்பற்றல் வேண்டும். |

### 1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூ. | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி ரூ. | வித்தியாசம் ரூ. | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| பசளை விற்பனை வருமானம் | 1,541,996,996 | 1,547,347,352 | 5,350,386 | இந்த சிக்கல் தொடர்பாக தேவையான சீரராக்கல்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்க விரும்புகின்றேன். | சரியான விற்பனை பெறுமதி இனங்காணப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.5 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கலின் விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்காக வெளிநாட்டு பசளை வழங்குனர்களுக்கு மக்கள் வங்கியினால் செலுத்தப்பட்டு நீண்ட கால கடனொன்றிற்கு மாற்றப்பட்ட பணத்திற்குரிய வட்டிப் பெறுமதியான ரூபா 160,447,581 ஆன பெறுமதி ஏனைய பெறப்பட வேண்டியவைகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அத் தொகை தீர்ப்பனவு செய்தல் தொடர்பாக பொது திறைச்சேரியினால் இணக்கம் வழங்கப்பட்டிராததுடன் அதன் பிரகாரம் இந்த தொகை மீள் நிரப்பு செய்வதற்கு திறன் காணப்படாமை மேலும் அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பணம் மீள்நிரப்பு செய்வதற்கான திறனை கருதப்படல் வேண்டும். |

### 1.5.6 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியினால் 2014/2015 மற்றும் 2016/2017 நிதி ஆண்டுகளில் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் கைதவிர்ப்பிற்காக மொத்த பெறுமதியான ரூபா 522,471 ஆன ஒதுக்கம் மேற்கொண்டு அது நடைமுறை அல்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்ததுடன் காகித பொருட்கள் கைதவிர்ப்பிற்காக 2019/2020 நிதி ஆண்டினுள் ரூபா 1,105,803 ஆன ஒதுக்கம் மேற்கொண்டு அது காகித பொருட்கள் இருப்பிலிருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி கழித்தல்கள் தொடர்பாக போதுமான தெளிவுப்படுத்தல் அல்லது மீளாய்வாண்டு வரையில் தொடர்ந்தும் அம் மீதிகள் முன்கொண்டு வருவதற்கான காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | மிகவும் பழமையான பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இந்த காகித பொருட்களின் பெறுமதி தொடர்பாக வரும் ஆண்டில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்க விரும்புகின்றேன். | கழித்தல்கள் தொடர்பாக போதுமான காரணங்கள் காண்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 ஏப்ரல் 06, 07 ஆந் திகதிகளில் மேற்கொண்ட வருடாந்த பௌதீக இருப்பு மெய்மையாய்வின் போது ரூபா 1,496,494 ஆன இரசாயன பசளை இருப்பு பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. | இந்த சிக்கல் தொடர்பாக தேவையான சீரராக்கல்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்க விரும்புகின்றேன். | இருப்பு பற்றாக்குறை தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.8 ஏனைய நிறுவனங்களின் வளங்களை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனிக்கு சட்ட ரீதியாக சுவீகரித்துக் கொள்ளப்பட்டிராத கம்பனியின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள வத்தளை ஹுனுபிடிய காணி ரூபா 90,000,000 இற்கு மதிப்பிடப்பட்டு நடைமுறை அல்லாச் சொத்துக்களினுள் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் அம் பெறுமானத்தினால் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த சிக்கல் தொடர்பாக எங்கள் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், இந்த காணியின் சட்ட ரீதியான உரித்து எங்கள் கம்பனிக்கு சுவீகரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமையை வலியுறுத்துவதற்கு விரும்புகின்றேன். | காணியின் சட்ட ரீதியான உரித்து உறுதிச் செய்துக் கொள்ளப்படல் வேண்டும். |

### 1.6 நிறுனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இரசாயண பசளை இறக்குமதி தடை செய்யும் அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்தினால் கம்பனியின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கையான இரசாய பசளை விற்பனை வருமானம் கம்பனி இழக்கும் அபாயம் காணப்பட்ட போதிலும் ஏனைய மூலோபாய செயற்பாட்டு நடவடிக்கைகக்கு முன்வருவதற்கு முகாமைத்துவம் தோல்வியடைந்திருந்ததுடன் கம்பனிக்கு சொந்தமாகவிருந்த Repo Deposit ரூபா 300,000,000 இல் ரூபா 150,000,000 ஆன தொகை ஒவ்வொரு திகதிகளிலும் ஏற்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | அரச கொள்கைகளுக்கு இணையாக அரச பசளைக் கொள்கை நடைமுறைப்படுத்தல் எங்கள் நிறுவனத்தின் பிரதான பொறுப்பாகும். கரிம உர கொள்கையின் பிரகாரம் எங்கள் நிறுவனத்தினால் Sri Lanka Land Development Corporation உடன் கொம்போஸ்ட் பசளை கொள்வனவு செய்வதற்கு உடன்பட்டிருந்ததுடன், அவ்வாறு கொள்வனவு செய்யும் கொம்போஸ்ட் பசளை மேம்படுத்தப்பட்ட கரிம பசளையாக சந்தைக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அரச கொள்கைகளின் நிலைத் தன்மை கடந்த காலத்தில் காணக்கூடியதாக இராமையினால் மூலோபாய திட்டங்களுக்காக நடவடிக்கையாக எங்கள் நிறுவனம் முன்னோக்கி நடத்திச் செல்லப்பட்டது. அரச கரிம பசளை கொள்கைக்கு இணையாக முதலீடு மேற்கொள்ளப்பட்டமையால் நிகழ்காலத்தில் கரிம பசளை கொள்கையிலிருந்து விலகியமை காரணத்தினால் பாரிய நிதி நட்டத்திற்கு முகங் கொடுப்பதற்கு நேர்ந்திருக்கக் கூடும். | வியாபார அபாயங்கள் இனங்காணப்பட வேண்டியதுடன் அதற்காக மூலோபாய திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2013 ஒக்தோபர் 07 திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் சுதேச நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளரின் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஊடாக திருத்தப்பட்ட தாபன விதிக் கோவையின் VIII அதிகாரத்தின் 10:1 ஆம் உப பிரிவு | வார இறுதியில் மற்றும் அரச விடுமுறை தினங்களில் பணியாற்றுவதற்கு அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரம் இன்றி 02 நாட்களை மிகைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நாட்டின் பசளை தேவைப்பாட்டின் 40% ஆன அளவு விநியோக பணிகளில் ஈடுப்பட்டிருக்கும் எங்கள் கம்பனி சிறு மற்றும் பெரும் போகங்களில் மிகவும் சிறிய காலப்பகுதியினுள் பசளை விநியோக செயன்முறை நிறைவு செய்யப்படல் வேண்டும். அதன் பிரகாரம் விவசாய மக்களின் தேவைப்பாட்டின் அடிப்படையில் விடுமுறை நாட்களிலும் கமநல சேவை மத்திய நிலையங்களிடமிருந்து பெற்றுக் கொடுக்கப்படுகின்ற கட்டளைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். இக் காரணத்தினால் மிகவும் குறைந்த பதவியணி சேவையாற்றும் எங்கள் கம்பனியின் சிறு மற்றும் பெரும் போகங்களில் பசளை தேவைப்பாடு விரைவாக பூர்த்தி செய்வதற்கு பணிப்பாளர் சபை பெற்றுக் கொடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் அரச விடுமுறை தினங்களில் பணியாற்றுவதற்கு இரு நிறைவேற்று உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். | அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2015 மே 25 திகதிய PED 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2016 ஒக்தோபர் 25 திகதிய PED 1/2015(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவு | MM 1-1 சேவைப் பிரிவிற்குரிய ஐந்து உத்தியோகத்தர்க-ளுக்கு மாதத்திற்கு ரூபா 10,000 வீதம் ஆண்டினுள் ரூபா 600,000 ஆன எரிபொருள் கொடுப்பனவு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிலிருந்துவிலகி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கை PED 01/2015 ஊடாக மத்திய மட்டத்திலான முகாமையாளர்களுக்காக குழு போக்குவரத்திற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மிகவும் குறைவான மத்திய மட்டத்தின் முகாமையாளர்கள் எண்ணிக்கை சேவையாற்றும் எங்கள் கம்பனியின் குழு போக்குவரத்திற்காக வாகனமொன்று ஒதுக்கப்பட்டு ஏற்பதற்கு நேருகின்ற கிரயத்தினை பார்க்கிலும் குறைந்த கிரயம் அவர்களுக்கு ரூபா 10,000/- ஆன கொடுப்பனவு பெற்றுக் கொடுப்பதில் ஏற்க நேரிடுவதனால் அது கருத்திற் கொள்ளப்பட்டு பணிப்பாளர் சபை இந்த தீர்மானத்தினை பெற்றுக் கொடுத்துள்ளது. மேலும் இதற்காக பொது திறைச்சேரியின் அங்கீகாரமும் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கொடுப்பனவு செலுத்தும் போது சுற்றறிக்கை பிகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII அதிகாரத்தின் 10.1 ஆம் உப பிரிவு | 1/20 கொடுப்பனவுக்கு உரித்துள்ள நிறைவேற்று தரத்தின் சில உத்தியோகத்தர்களுக்கு மாலை 4.30 இன் பின்னர் சேவையிலிருந்த மணித்தியாலங்களுக்காக மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டி – ருந்தது. | எங்கள் கம்பனி தேசிய பசளை தேவைப்பாட்டில் 40% ஆன பாரியளவு மேற்படி குறைந்த உத்தியோகத்தர்களின் பங்களிப்பில் விநியோக பணிப்பொறுப்பு மிகவும் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் இவ்வாறு மேற்படி பணி நிறைவேற்றப்படும் போது கடமை நேரத்தினை பார்க்கிலும் அதிகமாக கடமையாற்ற வேண்டி ஏற்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது இரவில் கடமையாற்றுவதற்கு நேருகின்ற உத்தியோகத்தர்களுக்காக மட்டும் மிகவும் நெருக்கடியான காலப்பகுதியினுள் இந்த கொடுப்பனவு மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபைன தீர்மானித்திருந்தது. அவ்வாறு செலுத்தப்படாதிருப்பின் மிகவும் குறுகிய காலப்பகுதியினுள் அதிகளவு பசளை அளவு நாடு முழுதும் விநியோகிக்கும் சிக்கல் ஏற்படுவதற்கு வாய்வு உள்ளதுடன் பசளை இறக்குமதி செயன்முறையின் போது நாளின் 24 மணித்தியாலங்கள் முழுதும் பசளை விடுவித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை-யினால் அந் நடவடிக்கையும் மேற்பார்வை செய்ய வேண்டியுள்ளது. இதனால் வேலை பிரிவின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு மட்டும் இந்த கொடுப்பனவு பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளை பின்பற்றுதல் வேண்டும். |

## 1.8 ஜரீ (IT) பொதுவான கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பசளை பெறுதல், வழங்குதல், மாற்றுதல் உள்ளடங்கலாக பசளை தொடர்பான முழுமையான செயன்முறை கணினி மயப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கணினி அமைப்பிற்கு முன் திகதியொன்றில் நாளதுவரையாக்கப்பட்ட வண்ணம் தரவுகள் உள்ளடக்கப்படும் திறன் காணப்படுகின்றமை, தேவையான பொது கட்டுப்பாடுகள் மற்றும் அமைப்புக் கட்டுப்பாடு செயற்படுத்தப்படாமையின் காணரத்தினால் கணினி அமைப்பு தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது. | கணினி அமைப்பில் ஏதும் குறைப்பாடு காணப்படுமெனில் அவை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்க விரும்புகின்றேன். | கணினி அமைப்பு தொடர்பான தேவைப்பாடு பொது மற்றும் அமைப்பு கட்டுப்பாட்டு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 259,896,602 ஆன இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த ஆண்டின் இலாபம் ரூபா 162,858,311 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 97,038,291 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு விற்பனை வருமானம், நானாவித வருமானம் மற்றும் விடுவித்தல் வருமானம் அதிகரித்திருந்தமை மற்றும் களஞ்சிய வாடகை செலவினம் குறைந்திருந்தமை பிரதான காரணமாகவிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொடுப்பனவு பெற்றுக் கொள்ளக்கூடிய மேலதிக நேரம் ஏதும் பெறுமானமொன்றிற்கு மட்டுப்படுத்தப்படாது முறையான முகாமைத்துவத்தும் மற்றும் கட்டுபாடு இன்றி மேலதிக கடமை புரிவதற்கு இடமளித்தல் காரணத்தினால் மொத்த மேலதிக கொடுப்பனவு பெறுமதி ரூபா 11.163 மில்லியன் வரையில் செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது. | மேற்படி விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் மிகவும் குறைந்த ஊழியர் எண்ணிக்கையில் தேசிய நெற்பசளை தேவைப்பாட்டில் 40% ஆன அளவு எங்கள் கம்பனியினால் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்படுகின்றதுடன் அக் காரணத்தினால் இவ்வாறு மேலதிக நேரக் கொடுப்பனவு அதிகமாக செலுத்துவதற்கு நேர்ந்துள்ளதுடன் பசளை விநியோகம் மற்றும் இறக்குமதி மேற்கொள்ளப்படாத காலப்பகுதியினுள் மேலதிக நேர மணித்தியாலங்களை மட்டுப்படுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றமையையும் தெரிவிக்க விரும்புகின்றேன். | கொடுப்பனவு மேற்கொள்ளும் போது முறையான கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018/2019 ஆண்டினுள் ஹம்பந்தோட்டை குத்தகை காணியில் களஞ்சியமொன்று கட்டுவிக்கும் நடவடிக்கைகளுக்கு பதிலாக ஏற்கப்பட்டுள்ள தொடக்கச் செலவுகளின் மொத்தம் ரூபா 3,732,901 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு வரையிலும் அக் காணியில் களஞ்சியம் கட்டுவிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு அல்லது ஏற்கப்பட்டுள்ள மூலதன செலவுகளுக்குரிய சொத்துக்கள் வேறு செயற்திட்டமொன்றிற்கு பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி செலவினம் விளைவற்ற செலவினமாக ஆகியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | அரசாங்க பசளை கொள்கை மாற்றமடைந்ததுடன் இரசாய பசளை இறக்குமதி செய்தல் தடை செய்யப்பட்டதன் காரணத்தினால் பசளை களஞ்சியங்களின் கட்டுமானம் தற்போது எழவில்லை. அதனால் அக் காணி வேறு வினைத்திறனான செயற்திட்டமொன்றிற்காக பயன்படுத்துவதற்கு எங்கள் கம்பனியினால் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமையை தெரிவிக்க விரும்புகின்றேன். | சொத்துக்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் அனைத்து அரசாங்க கம்பனிகளும் நிதிக் கூற்றுக்களை தயாரித்து கணக்காயவாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனிலும், 2020/2021 நிதி ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் கணக்கு ஆண்டு முடிவடைந்து 277 நாட்கள் கடந்த பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2020/2021 நிதி ஆண்டு முழுவதிலும் நிலவிய "கொவிட் -19" தொற்று நிலையின் காரணத்தினால் பல சந்தர்ப்பங்களில் நாடு மூடப்பட்டிருந்ததுடன், ஊழியர்கள் சேவைக்கு அழைத்தல் மட்டுப்படுத்தப்பட நேர்ந்தது. இக் காரணத்தினால் உரிய திகதிகளில் கணக்குகள் தயாரிக்கும் திறன் காணப்படாமையினால் நிதி அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு போதுமான காலம் எங்களுக்கு பெற்றுக் கொடுக்குமாறு 2021 யூன் 03 ஆந் திகதிய கடிதத்தின் ஊடாகவும் கோரப்பட்டுள்ளது. அவ்வாறே, 2019/2020 கணக்கு ஆண்டிற்குரிய கணக்காய்வு அறிக்கை வழங்குவதற்கு தாமதித்தமையும் இதற்கு காரணமாகியதென தெரிவிக்க விரும்புகின்றேன். | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 5. ஏனைய விடயங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனைத்து நிதி ஆண்டு இறுதியிலும் ஐயக் கடன் ஒதுக்கப்படல் கம்பனியின் கொள்கையொன்றாக காணப்பட்டபோதிலும் 2018/2019 ஆண்டின் பின்னர் கம்பனியினால் அக் கொள்கை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஐயக் கடன் ஒதுக்க கணக்கில் ரூபா 37,961,958 ஆன மீதியினுள் பத்து ஆண்டுகளை மிகைத்த இலங்கை உரக் கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,857,456 ஆன மீதி மற்றும் ஏழு ஆண்டுகளை மிகைத்த தனியார் நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 31,507,476 மீதியுடன் காணப்படுகின்றதுடன் அப் பெறுமானம் ஐயக் கடன் ஒதுக்கத்திர் 95 சதவீத உயர்நத பெறுமானத்தினை கொண்டது. அம் மீதிகள் அறவிடப்படல் நிச்சயமற்றதாக காணப்படினுள் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | ஐயக் கடன் ஒதுக்க கடனின் மீதிகள் மிகவும் பழமையான மற்றும் அறவிடுவதற்கு திறன் காணப்படாதவை என உறுதி செய்துக் கொள்ளக் கூடிய கடன்பட்டோர் மீதி பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கடன் மீதி பதிவழிப்பதற்குரிய பொது திறைச்சேரி சுற்றறிக்கையின் 01/2020 ஆம் இலக்க ஆலோசனை பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றதென ரெிவித்துக கொள்ள விரும்புகின்றேன். | அனைத்து நிதி ஆண்டு இறுதியிலும் ஐயக் கடன் ஒதுக்கமானது கம்பனியின் கொள்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இறக்குமதி செய்யப்பட்ட பசளை உறுதிச் சீட்டுக்கள் தீர்ப்பதற்கு பதிலாக மீளாய்வாணடினுள் பெற்றுக் கொள்ளப்பட்ட குறுகிய கால கடன் தொகைக்குரிய ரூபா 7,001,558 ஆன அரசாங்க முத்திரைக் கட்டணம் மற்றும் காகித பொருள் கட்டணம் வங்கி கட்ணட கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு கம்பனியின் செலவொன்றாக பதிவழித்தமையின் காரணத்தினால் கடந்த ஆண்டிற்கு இணையாக இந்த ஆண்டின் வங்கி கட்டண செலவினம் 5,417 சதவீத அசாதாரண அதிகரிப்பொன்றை காண்பித்திருந்தது. மேற்படி செலவினம் இந்த ஆண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவழித்தல் தொடர்பாக விடயங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த செலவினம் இலாபத்திற்கு ஈடாக பதிவழித்தல் தொடர்பான விடயங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | திறைச்சேரியின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கம்பனியின் ஊழியர்களினால் சேமிக்கப்பட்ட குறுகிய விடுமுறை மற்றும் வைத்திய விடுமுறைக்காக மொத்த பெறுமதி ரூபா 2,176,747 ஆன விடுமுறைக் கொடுப்பனவு மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்காக மொத்த பெறுமதி ரூபா 1,196,450 ஆன சேமிக்கப்பட்ட வைத்திய விடுமுறைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிக்கவில்லை. | கொடுப்பனவுகள் செலுத்தும் போது திறைச்சேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். |